பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

13 11 2024 **WEDNESDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு இன்று நடைபெற்ற முதல்கட்ட தேர்தலில் 65 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

2. சுற்றுலா துறையின் வளர்ச்சி கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவிடும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

3. பிரஸார் பாரதியின் **OTT** சேவை கோவா சர்வதேச திரைப்பட விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரிபவர்களுக்கு நல வாரிய அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. மலேசிய கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Ramit Tandon**-ஐ காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக 43 தொகுதிகளில் நடைபெற்ற தேர்தலில் 65 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் அதிகபட்சமாக **Lohardaga** தொகுதியில் 73 சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக ராஞ்சியில் 60 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

வாக்குப்பதிவு பொதுவாக அமைதியாக நடைபெற்று முடிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இரண்டாவது மற்றும் இறுதிகட்ட தேர்தல் வரும் 20ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதற்கிடையே, 10 மாநிலங்களுக்கு உட்பட்ட 31 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவும் இன்று நடைபெற்றது.

இதேபோல், கேரள மாநிலம், வயநாடு மக்களவை தொகுதிக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவும் அமைதியாக நடைபெற்று முடிந்தது. இதில் 61 சதவீத வாக்குகள் பதிவாகின.

இந்நிலையில், மஹாராஷ்ட்ர சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக வரும் 20ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

>>>>><<<<<

சுற்றுலா துறையின் வளர்ச்சி கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவிடும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

**Dadra Nagar Haveli** மற்றும் **Daman Diu**—வில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கிராமங்களின் வளர்ச்சி தான் நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

**>>>>><<<<<**

மேற்காசியாவில் நிலவும் சூழ்நிலை கவலை அளிப்பதாக உள்ளது வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா — சவுதி அரேபியா இடையே அரசியல், பாதுகாப்பு, சமூகம் மற்றும் கலாச்சாரக் குழுவின் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தொழில்துறையில் இருநாடுகளுக்கும் இடையே பரஸ்பரம் புதிய வாய்ப்புகள் குறித்து அவர் இக்கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

சுகாதாரம், கல்வி, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

**>>>>><<<<<**

மீன் உற்பத்தி கடந்த பத்தாண்டுகளில் அதிகரித்துள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன்சிங் கூறியுள்ளார்.

அருணாச்சலப்பிரதேசம், இட்டா நகரில் மத்திய அரசு திட்டங்களின் செயலாக்கம் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

2014ஆம் ஆண்டு 96 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி, தற்போது 176 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அருண்ணாச்சலப்பிரதேசத்தில் மீன் தொழில்துறையினருக்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளதாக திரு. ராஜீவ் ரஞ்சன்சிங் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

ஹரியான சட்டப்பேரவை கூட்டத் தொடர் ஆளுநர் திரு. பண்டாரு தத்தாத்ரேயா உரையுடன் இன்று தொடங்கியது.

ஹரியானாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளும் என்று ஆளுநர் தமது உரையில் தெரிவித்தார்.

ஹரியானா சட்டப்பேரவை தேர்தலில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை மக்கள் அளித்துள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஹரியானா அரசு முன்னுரிமை அளிக்கும் என்றும் திரு. பண்டாரு தத்தாத்ரேயா தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆந்திராவில் விசாகப்பட்டிணம் மெட்ரோ ரயில் திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும் என்று அம்மாநில நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. பி. நாராயணா கூறியுள்ளார்.

இன்று விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நான்கு வழித்தடங்களில் மெட்ரோ ரயில் சேவையை இயக்குவதற்கான விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

முதல்கட்டமாக 3 வழித்தடங்களில் 11 ஆயிரத்து 498 கோடி ரூபாய் செலவில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

46 கிலோமீட்டர் தூரத்திற்கு அமையவுள்ள இந்த வழித்தடம், 42 ரயில் நிலையங்களை கொண்டிருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இரண்டாவது கட்டமாக 30 கிலோமீட்டர் தொலைவிற்கு அமையவுள்ள வழித்தடத்தில் 12 ரயில் நிலையங்கள் இடம்பெறும் என்றும் திரு. நாராயணா கூறியுள்ளார்.

>>>>><<<<<

பிரஸார் பாரதியின் **OTT** சேவை கோவாவில் நடைபெறவுள்ள சர்வதேச திரைப்பட விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. **Sanjay Jaju** கூறியுள்ளார்.

இன்று ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகள், இசை, விளையாட்டு, வரைகலை உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இந்த **OTT-**யில் இடம்பெறும் என்றார்.

இந்திய படைப்பாற்றல் தொழில்நுட்பத்தின் மண்டல மையம் ஹைதராபாதில் ஏற்படுத்தப்படும் என்றும் திரு. **Sanjay Jaju** தெரிவித்தார்.

இதற்கிடையே, கோவா சர்வதேச திரைப்பட விழாவில் தங்கமயில் விருதுக்காக 15 திரைப்படங்கள் போட்டியிடுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

திரைப்பட தயாரிப்பாளர் திரு. அசுதோஸ் கோவரிக்கர் தலைமையிலான தங்கமயில் நடுவர் குழு, சிறந்த படம், சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர், நடிகை மற்றும் சிறப்புப் பரிசு உள்ளிட்ட பிரிவுகளில் வெற்றியாளர்களை தேர்வு செய்யும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பண்டிகை காலங்களில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாக ரயில்வே வாரியத்தின் தலைவர் திரு. சதிஷ்குமார் கூறியுள்ளார்.

பீகார் மாநிலம் **Darbharga-**வில் எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், பயணிகளின் நலனில் ரயில்வே அக்கறை கொண்டுள்ளதையே இது உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

வருங்காலங்களிலும் பயணிகளின் நலனுக்கு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்று திரு. சதிஷ்குமார் கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரிபவர்களுக்கு நல வாரிய அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்று சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு. நாசர் கூறியுள்ளார்.

நாகை மாவட்டம், வேளாங்கண்ணியில் நடைபெற்ற உபதேசியார்களுக்கு நல வாரியம் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சிறுபான்மையினர் நலனுக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசின் திட்டங்களை சிறுபான்மையின மக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**>>>>><<<<<**

தமிழகத்தில் மெத்தனால் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றை முறைப்படுத்துவதற்காக கூட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

மாவட்டந்தோறும் இந்தக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்களின் செயல்பாடுகள் அனைத்தும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் கண்காணிக்கப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதிமுறைகளை மீறி செயல்படும் நிறுவனங்கள் மீது சட்டரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தமிழக அரசு எச்சரித்துள்ளது.

**>>>>><<<<<**

மலேசிய கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Ramit Tandon**-ஐ காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 11-5, 14-12, 5-11, 11-4 என்ற செட்கணக்கில் எகிப்தின் **Yahya Elnawasany**-ஐ வென்றார்.

வேலவன் செந்தில்குமார் மற்றும் அபய் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினர்.

**>>>>><<<<<**

பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று தங்கப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் கலப்பு இரட்டையர் பிரிவில் **Aishwary Pratap Singh Thomar – Sanjeeta Das** இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

**>>>>><<<<<**

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Centurion**-ல் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

**>>>>><<<<<**

நான்கு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

**>>>>><<<<<**

ரயில்வே அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில் தமிழக அணி விக்கெட் இழப்பின்றி 19 ரன் எடுத்துள்ளது.
அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தமிழக அணி முதலில் பந்து வீச தீர்மானித்ததை அடுத்து ரயில்வே அணி பேட் செய்தது.
தொடக்க முதலே விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கிய ரயில்வே அணி முதல் இன்னிங்ஸில் 229 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.
அதிகபட்சமாக முஹமது சயீஃப் 60 ரன் எடுத்தார்.
அஜித்ராம் அபாரமாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**>>>>>END<<<<<**